

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.10.2023) முகாம் அலுவலகத்தில், பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அவர்கள் சந்தித்து, தனது மகள் டாக்டர் தாரணி - டாக்டர் பரத் கௌசிக் ஆகியோரது திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் இரு வீட்டாரின் குடும்பத்தினர் உள்ளனர்.

### புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்!

# வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் வரவேற்பு!

## சங்கத் தலைவர் எஸ்.இரத்தினவேலு அறிக்கை!

சென்னை, அக். 14-

“புதிய வரி நிலுவைத் தொகை சமாதான திட்டத்தை வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் வரவேற்கிறது” என்று இச்சங்கத்தின் தலைவர் எஸ். இரத்தினவேலு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள வணிகப் பெருமக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கும், வணிக வரித்துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல் முறையீடுகள் குறித்த பிரச்சனைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக “புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டத்தை” அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் வணிகவரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களுக்கும் வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

GST வரிச்சட்ட அமலாக்கத்திற்கு முன் அமலில் இருந்த தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் ஆகியவற்றின் கீழ் அரசுக்குச் செலுத்தப்படவேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியவை, வணிகர்களால் அல்லது அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான வழக்குகளில் இன்னமும் நிலுவையில் இருக்கின்றன. அவற்றிற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென எங்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழில் வர்த்தக சங்கம் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில் இந்த புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த திட்டத்தின் படி இதில் ஓர் வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூ.50,000ற்குக் குறைவாக வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு இந்த நிலுவைத் தொகையானது முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது, அதிலும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் கொடுக்கப்பட்டுள்ள இந்த வரிவிலக்குச் சலுகையினால் பலசரக்கு போன்ற வேளாண் உணவுப் பொருட்களில் வணிகம் செய்யக்கூடிய சிறு வணிகர்கள் மற்றும் தொழில் முனைவோர் மிகுந்த பலனடைவார்கள். தமிழ்நாடு அரசுக்கு அவர்கள் தங்கள் நன்றியை தெரித்துக்கொள்கிறார்கள். அதேபோல் எவ்வளவு தொகை நிலுவையில் இருந்தாலும் அவை நான்கு வரம்புகளாகப் பிரிக்கப்பட்டு உச்சபட்சமாக 80 சதவீதத்திலிருந்து, நிலுவையிலுள்ள பாக்கித் தொகைக்கு ஏற்ப வரிச்சலுகை அளிக்கப்பட்டிருப்பதையும் மிகவும் பாராட்டி வரவேற்கிறோம். அத்துடன் நிலுவைத் தொகையினை வணிகர்கள் செலுத்த முன்வரும் நாள் வரை திரண்ட வட்டித் தொகையை (accrued interest) முழுவதுமாகத் தள்ளுபடி செய்திருப்பது எந்த அரசும் செய்திடாத மிக முக்கியமான சலுகையாகும்.

மிக ஆழமாகச் சிந்தித்து, வணிகர்களின் துயரத்தைப் புரிந்துகொண்டு பெயரளவுக்கு என்றில்லாமல் உண்மையிலேயே தொழில் வணிகத்துறையினர் தங்களுடைய வரி, வட்டி, அபராத பாக்கித் தொகையிலிருந்து விடுபட்டு தங்கள் தொழிலில் முழு கவனம் செலுத்தி வளர்ச்சி காணச் செய்யும் அருமையான திட்டம் இது.

அதே போல் GST வரிச் சட்டம் அமலாக்கம் செய்யப்பட்ட 01.07.2017ல் இருந்து 31.03.2022 வரை ஆரம்பகாலத்தில் இந்த புதிய வரிமுறை வரிமுறை குறித்து அதிகாரிகளுக்கும் வரி விற்பன்னர்களுக்குமே சரியான புரிதல் இல்லாத காலத்திலும், கொரோனாத் தொற்றுகாலத்தில் சரக்குத் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று அரசு கோரிக்கை வைத்த காலத்திலும் வணிகர்கள் சட்ட நடைமுறைகளையும், eway bill நடைமுறைகளையும் சரியாகக் கடைபிடிக்க முடியாமல் வணிகம் செய்தனர். எனவே 31.03.2022 வரை GST சட்டத்தின் கீழ் வரி ஏய்ப்பு இல்லாத எந்த நடைமுறைத் தவறுக்கும் நடவடிக்கை எடுக்கப்படாது என தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு எஸ்.இரத்தினவேலு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### சிவகங்கை மாமன்னர் மருது பாண்டியர்கள்,

# தேவர் குருபூஜை விழா பாதுகாப்பு ஏற்பாடுகள்!

## மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனை!

சிவகங்கை. அக். 14-

சிவகங்கையில் ஆட்சி புரிந்த மாமன்னர்கள் மருது பாண்டியர்கள். இவர்களது குருபூஜை ஆண்டுதோறும் அரசு விழாவாக அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி திருப்பத்தூரில் நடைபெற்று வருகிறது. இம்மாதம் வருகிற 24 ஆம் தேதி திருப்பத்தூரில் மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்திலும் 27ம் தேதி அவர்களை அடக்கம் செய்த காளையார் கோவிலிலூம் நடை பெற உள்ளது.

மேலும் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் குருபூஜை வருகிற அக்டோபர் 30ஆம் தேதி பசும்பொன் கிராமத்தில் நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் போலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் பி.கே. அரவிந்த் முன்னிலையில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் பேசியதாவது. அரசின் சார்பில் வருகிற 24ஆம் தேதி திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் 222 வது குரு பூஜை விழா நடைபெற உள்ளது. இவ்விழாவில் அமைச்சர்கள், சட்ட மன்ற, நாடாளுமன்ற, உறுப்பினர்கள் அரசின் சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு சமுதாய தலைவர்கள் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளார்கள். 27ஆம் தேதி காளையார் கோவிலில் மருது பாண்டியர்கள் நினைவிடத்தில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. மேலும் வருகிற 30 ஆம் தேதி பசும்பொன்னில் தேவர் குருபூஜை விழாவும் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவருபவர்கள் இருசக்கர வாகனங்களில் செல்லக்கூடாது.

சொந்தமான நாலு சக்கர வாகனங்களில் செல்ல வேண்டும். அதற்கான ஆவணங்களை வைத்திருக்கவேண்டும். சோதனை சாவடிகளில் ஆவணங்களை கேட்கும் பொழுது காண்பிக்க வேண்டும். சொந்த வாகனம் இல்லாதவர்கள் அரசு பஸ்களில் செல்லலாம். அந்தந்த மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் விண்ணப்பித்து அரசு நிர்ணயத்துள்ள கட்டணங்களில் செல்லலாம். சென்ற ஆண்டு போல் இந்தாண்டு அமைதியான முறையில் இரண்டு குரு பூஜை நிகழ்ச்சியினை நடைபெற அனைத்து சமுதாய தலைவர்களும் அரசியல் கட்சியினரும் பொது மக்களும் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு ஆட்சியர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய்அலுவலர் மோகனசுந்தரம், பல்வேறு சமுதாய தலைவர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் காவல்துறை துணை கண்காணிப் பாளர்கள், உட்பட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.



மதுரை மாநகராட்சி 58வது வார்டுக்கு உட்பட்ட ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மழைநீர் வாய்க்கால்களை தூய்மைப்படுத்தும் பணியை மாமன்ற குழுத்தலைவர், கவுன்சிலர் மா.ஜெயராம் ஆய்வு செய்தார். உடன் 58அ வட்டச் செயலாளர் பி.எம்.ராஜா உள்ளார்.

# அண்ணாவின் அன்புத் தம்பி; அஞ்சாத ஆசைத் தம்பி!

அண்ணாவின் தம்பிகள்
ஆயிரம் ஆயிரம்
எண்ணிலா இளைஞர்கள்;
இலட்சிய ஈட்டிகள்!
விண்மீன்கள் நெருங்கிய
விரிவானில் விளங்குதல்போல்
கண்முன்னே விரிந்திடக்
கழகந்தான் வளர்ந்திடத்
திண்மையாய் எழுந்தோருள்
சிகரமாய்த் திகழ்ந்தவர்;
கண்ணாகக் கழகத்தைக்
கருதிய பாசத்தம்பி
நண்ணியே என்னுடன்
நடந்தவர் என் நல்லதம்பி!
அண்ணாவே பாராட்டி
அகமகிழ் அறிவுத்தம்பி;
அண்ணாவின் நெஞ்சிலே
அமர்ந்தவோர் ஆசைத்தம்பி!

வண்மையை நாடாமல்
வழுவியும் ஓடாமல்
உண்மையாய் இறுதிவரை
உரிமையோடு இருந்தவர்!
தொண்டராய்த் தோழராய்,
துணையெனத் தலைவராய்
மண்டிலம் எங்குமே
மாண்புற வளர்ந்தவர்
கண்டிலம் இவர்போலக்
கடமை,கண் ஆனவர்!

கருத்துள்ள நூலொன்று
"காந்தியார் சாந்தியடைய",
பொருத்தமாய் எழுதிடப்
புரட்சிநூல் என்றரசு
கருதியதால் ஆறுமாதக்
கடுங்காவல் விதித்ததுடன்
நெருக்கமாய் இருந்தமுடி
நீக்கியே மொட்டைபோட்டு
வருத்திடினும் கொள்கைத்தேர்
வலமாக எழுந்தவர்!

தனிநாடு கோரிக்கை
தழைத்திருந்த காலத்தில்
நனிஎழுச்சி மிகுந்திருந்த
அண்ணாவின் நாள்களிலே
தனியரசு நாளிதழ்
தயங்காமல் நடத்தியவர்!
முனைப்புடன் எழுதியவர்;
முப்போதும் விடுதலை
நினைப்போடு இயங்கியவர்;
நெருப்பாக முழங்கியவர்!
தனைத்தலைவர் எனக்கருதித்
தனிக்கட்சி தொடங்கியவர்
எனைத்தொன்றும்
செய்யத்தான்
இயலாதென்று அறிந்தனால்
தினையளவும்
தடுமாற்றம் தீண்டாமல்
திகழ்ந்தவர்;



கனவிலும் அண்ணாதான்
கழகமெனத் திளைத்தவர்!

வேலாகப் பாய்ந்தவர்;
வீணரைக் காய்ந்தவர்;
பாலினை ஒத்தவர்;
பட்டதை உரைத்தவர்
நூலினை எழுதியதால்
சிறையிலே நோற்றவர்;
ஆல்போன்ற கழகத்தின்
அகலாத விழுதவர்;
கோலேந்தி ஆள்வதற்குக்
கொள்கைவயல் உழுதவர்!
சாலவே மாந்தர்க்குத்
தன்மானம் பகுத்தறிவு
கோலமெனப் பெரியார்போல்
கொள்கையைப் பொழிந்தவர்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

கலைஞரின் தோழரென்ற
காரணத்தால் மிசாவெனும்
கொலைகாரச் சட்டத்தின்
கொடுங்குகைப் பட்டவர்;
வலையுற்ற சிங்கத்தை
வணங்காத செம்மலை
சிலநாளா? ஓராண்டு
சிறையிலே இட்டனர்!
உலையாகக் கொதித்திடும்
உள்ளந்தான்; கழகத்தை
இலையென ஆக்குதற்கு
இழைத்தபல கொடுமைகளை
மலைபோல நின்றெதிர்த்த
மறவருள் ஒருவராய்த்
தலைநிமிர்ந்து நின்றவர்;
தன்மானக் குன்றவர்;
குலையாமல் திகழ்ந்தவர்;
கொள்கையில் முகிழ்த்தவர்!

குறையெதிர்த்துப் போராடிக்
குண்டுதடி கண்டவர்க்குச்
சிறைச்சாலை மலர்க்கூட்டச்
சித்திரச் சோலையன்றோ!

அஞ்சாத தம்பியாய்
அண்ணாவோ டிருந்தவர்;
நெஞ்சுரமாய் முதல்தேர்தல்
நின்றுவெற்றி பெற்றவர்!
எஞ்சிய தேர்தலிலும்
வெற்றியே எட்டியவர்;
விஞ்சியே நாடாளு
மன்றமும் வென்றவர்;
துஞ்சியது அந்தமானில்
துயரினும் துயரன்றோ!
வஞ்சகம் கூற்றுவன்
வலிந்தங்குப் பறித்தது,
கொஞ்சமும் ஏற்கத்தான்
கூடாத வினையன்றோ!
பிஞ்சாகிக் காயாகிப்
பெருங்கனி ஆகுமுன்னே
நஞ்சகம் ஆனதன்றோ!
நல்லுயிர் போனதன்றோ!
நெஞ்சகம் அவர்தொண்டு
நினையாமல் போகுமோ?
எஞ்சிடும் காலமெல்லாம்
இல்லாமல் ஆகுமோ?
மஞ்சுசூழ் வையத்தில்
மணந்தென்றும் நீளுமே!

வெண்தாடிப் பெரியார்போல்
வெளிப்படையாய்ப்
பேசியதால்
வண்ணமாய் அழைத்தனர்
வாலிபப் பெரியார்என்று!
எண்ணத்தில் பகுத்தறிவு
இயங்கலில் தன்மானம்
மண்விட்டுப் போகுமட்டும்
வாழ்விலே கொண்டவர்!
விண்தொடும் புகழோடு
விளங்குகின்ற நூறாவது
எண்தொடும் பிறந்தநாள்
இலட்சியம் சிறந்தநாள்
வண்டுதும் மலர்களை
வாரிவாரித் தூவியே
கொண்டாடிப் போற்றுவோம்!
கொள்கைமகன் ஏற்றுவோம்!

பழமையை மறவாத
பண்புயர் தளபதியார்!
உழைத்தோரின் தொண்டினை
உயர்த்துகிற தலைவரவர்!
இழையான தொண்டரை
ஏற்றுகிற முதல்வரவர்!
இழப்பினுக்கு ஆளாகி
இடர்ப்பட்டும்
துயர்ப்பட்டும்
உழன்றசிறை வயப்பட்டும்
உருக்குலையா உறுதியுடன்
எழுந்தவர் ஆசைத்தம்பி
என்றவரின் நூற்றாண்டு
விழைவுடன் கொண்டாடும்
விழாவிங்கு வாழ்கவே!
மழையாகப் பெருகியுயர்
மாப்புகழ் வளர்கவே!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில்

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் த.மனோதங்கராஜ் சிறப்புரை!

நாகர்கோவில், அக். 14-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடை பெற்றது பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார் !

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் 12.10.2023, வியாழக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் பால்வளத்துறை அமைச்சர் த. மனோதங்கராஜ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள். கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட மற்றும் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி இளைஞர் அணி மாநில செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்து கலந்து கொண்டு சிறப்புரை யாற்றும் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வெண் சீருடையில் கலந்து கொள்வது எனவும், கழக மூத்த முன்னோடி களை சிறப்பு செய்யும் வகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் 1000 பேருக்கு தலா ரூ.10,000/ வீதம் மொத்தம் ரூ. 1 கோடி மதிப்பிலான பொற்கிழிகள் வழங்கும் நிகழ்ச்சியிலும் மற்றும் கலைஞர் நூலகம் திறப்பு விழா நிகழ்ச்சியிலும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இளை ஞர்கள் அதிக அளவில் பங்கேற்க செய்ய வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கழக இளைஞர் அணி மாநில செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வருகிற 27.11.2023 அன்று மாவட்டம் முழுவதும் ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில் நலத் திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர், ஆதரவற்றோர் காப்பகத்தில் உணவுகள் வழங்கியும் சிறப்பாக பிறந்த நாளை கொண்டாடிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் மாதம் 17ம் தேதி (17.12.2023, ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது. தலைவர் கலைஞர் நூற்றாண்டில் 2024 நாடாளு மன்ற தேர்தலுக்கு முன்பாக நடைபெற உள்ள இந்த மாநாட்டை இந்திய அரசியலில் திருப்புமுனை மாநாடாகவும், தமிழ்நாடு வரலாற்றில் தடம் பதிக்க கூடிய மாநாடாகவும் மாற்ற, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் ஆயிரக்கணக்கானோரை கலந்து கொள்ள செய்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### சேலம் கிழக்கு மாவட்டம்

# கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் கிழக்கு மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் செயலாளர் வி.பி.ராஜா அவர்கள், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **என்.சண்முகம்,** (தம்மம்பட்டி & அஞ்சல், சேலம் மாவட்டம்.) அவர்கள், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.10.2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!

